# முத்தமிழ் தலைவன் மூவொரு இறைவன்

முத்தமிழ் தலைவன் மூவொரு இறைவன்
எழுந்து வருகின்றார் - என்
நெஞ்சத்தில் நிறைந்து சிந்தையில் கனிந்து
இனிமை பொழிகின்றார்... - 2
என் இறைவன் வருகின்றார் - 2 ( 2 )

**1**
வாழ்வினை இழந்து வாடியே உலர்ந்த
உள்ளத்தில் உறைகின்றார் - அங்கு
வரட்சியை நீக்கி, வளமையை ஈந்து
வாழ்வாய் மாறுகின்றார் ( 2 )
எண்ணில்லாத அருளினால் என்றும்
என்னை ஆளுகின்றார்
என் இறைவன் வருகின்றார் ( 2 )

**2**
பாவத்தின் பிடியில் தவித்திடும் நிலையில்
பாவியைத் தேடி வந்தார் - தன்
உடலையே கொடுத்து விடுதலையளித்து
உயிராய் மாறுகின்றார் ( 2 )
எல்லையில்லாத அன்பினைப் பொழிந்து
என்னைக் காக்கின்றர்
என் இறைவன் வருகின்றார் ( 2 )